பேரவை முன்னுள்ள கேள்வி : ''தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு கடன் நிவாரண திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5, ஒழுங்குப் பிரச்சினை.

ஆளுநர் உரை மீதான விவாதத்தின் போது மற்ற அறிவிப்புகளையும் எடுத்துக் கொள்வது.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறேன். விதி 54 இன் கீழ் சில கவன ஈர்ப்பு நோட்டீஸ்கள் கொடுத்தேன். அவைகளுக்கு எல்லாம் தாங்கள் அனுமதி மறுத்து எனக்கு அனுப்பி இருக்கிறீர்கள். அதை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று விதியிலே இல்லை. நம்முடைய விதி 13-இல்

Sub-Rule 3-இல்

The discussion on the address may be interrupted in the Course of a sitting by an adjournment motion under Rule 55.

என்று இருக்கிறது. சபையை ஒத்திவைக்கக் கோரும் அட்ஜர்ன் மென்ட் மோஷனை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் கவன ஈர்ப்பை எடுக்க வேண்டாம் என்றால் எப்படிச் சரியாகும்?

இன்றைக்கு நாட்டிலே எவ்வளவோ நாலாவிதமான செய்திகள் நடக்கின்றன. எல்லாவற்றையும் நீங்கள் கொடுக்கிற 10 நிமிடத்திற்குள்ளே நாங்கள் பேசி முடித்துவிட முடியாது. அப்படி எடுக்கக்கூடாது என்று இருந்தால் இந்த விதியை நீங்கள் இங்கே போட்டிருக்க வேண்டாம். கவர்னர்ஸ் அட்ரஸ் இருக்கிறபோது வேறு எதையுமே எடுக்கக் கூடாது என்று இதிலே சொல்லியிருக்கிறீர்கள். சபையிலே வேறு எதையுமே எடுத்துக்கொள்ள மாட்டீர்களா? இல்லை, எதையாவது எடுப்போம் என்று சொல்கிறீர்களா? இல்லை. இதை மாத்திரம் எடுக்கமாட்டேன் என்று சொல்கிறீர்களா? அப்படி எடுக்கக்கூடாது என்று முடிவு எடுத்தால் இந்த விதியை நீங்கள் திருத்தியிருக்கவேண்டும் சட்டமும் இருக்கும், எடுக்கவும்

1982 பிப்ரவரி 5] [திரு. துரைமுருகன்]

மாட்டேன் என்று சொன்னால் அது முறையல்ல. நான் சபாநாயகர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, அட்ஜர்ன்மென்ட் மோஷனையோ கால் அட்டென்ஷனையோ பிரிவிலேஜையோ மற்றவற்றையோ எடுக்கமாட்டேன் என்று சொல்கிறீர்களா?

[முற்பகல் 10-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54-வது விதியின்கீழ் உள்ள கவன ஈர்ப்புகளை நாளையிலிருந்து எடுப்பதற்கான வழிவகை செய்து கொண்டிருக்கிறேன். முடிந்தவரையில் அவைகளை எடுக்கிறேன்.

திரு. துரைமுருகன் : எனக்கு ஒரு உறுதிமொழி கொடுங்கள். நான் கொடுத்தது எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்பதைப் பார்த்துத்தான் முடிவெடுக்க வேண்டும். 54-வது விதியின்கீழ் தினசரி இரண்டு கவன ஈர்ப்புகளை எடுப்பதாக இருக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, உங்கள் முடிவை நான் வரவேற்கிறேன். திரு. துரைமுருகன் அவர்கள் ஏற்கனவே பேசிவிட்டார்கள். பிறகு அவர் அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுக்கக் கூடாதா? அவர் பேசிவிட்ட காரணத்தால் நாளைக்கு எதையும் ரெய்ஸ் செய்யக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 9-ஆம் தேதி வரையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடக்கவிருக்கிறது. அதற்குள் எல்லாக் கட்சித் தலைவர்களும் கலந்து கொள்ளவும், ஆளும் கட்சிக் காரர்களுக்கும் அமைச்சர்களுக்கும் நேரம் ஒதுக்கியாக வேண்டும்.

Thiru V. KRISHNAMOORTHI : It is an fundamental right to raise a matter, when we feel it is very urgent. The Hon. Speaker should not foreclose our rights.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் பற்றி எனக்கும் தெரியும். நானும் உறுப்பினராக இருந்திருக்கிறேன். ஆனால் நேரத்தையும் பார்த்துத்தான் அனுமதி கொடுக்க வேண்டியதாக இருக்கிறது;